(ஆ) இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) அரசுக்கு முறையீடுகள் வரவில்லை.

(ஆ மற்றும் இ) இருப்பினும் இத்தொகுதியில் உள்ள அரசு சாலைகளைப் பராமரிக்க 1980-81 ஆண்டு பராமரிப்பு நிதியில் ரூ 3,03,300 ஒதுக்கீடு செய்யப்பட்டும், பேருந்து சாலைகள் திட்டத்தின்கீழ் ஐந்து சாலைப் பணிகளுக்கு ரூ. 24.87 இலட்சம் மதிப்பீட்டிற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சங்கனூர் பள்ளத்தின் மீது கட்டப்படும் பாலம்.

*வினா எண் 192—திரு. மா. சின்னராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை பெருநகரோடு இரத்தினபுரி பகுதியை இணைக்கும் சங்கனூர் பள்ளத்தின் மீது கட்டப்பட உள்ள பாலம் கட்டும் பணி எந்த நிலையில் இருக்கிறது?

(ஆ) இத்திட்டத்தை விரைவில் முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சங்கனூர் பள்ளத்தின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலப்பணி தமிழ்நாடு மாநில கட்டுமான வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு வேலை துரிதமாக நடந்து கொண்டு வருகிறது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மேம்பாலத்திற்காக என்ன முதலீடு செய்யப்படுகிறது, திட்டத்தினுடைய காலம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூ. 4½ இலட்சம். ஓராண்டுக் காலத்தில் முடிக்கப்படும்.

திரு. மா. சின்னராசு: இதே இரத்தினபுரி பகுதியில், 1979-இல் மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையை சத்தியமங்கலம் நெடுஞ்சாலையோடு இணைப்பதற்கான இணைப்புச்சாலைக்கு, அன்றைக்கு டெண்டர் கூட விடப்பட்டது. ஆனால், அந்தப் பகுதி மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட காரணத்தினால், அந்தத் திட்டத்தை மாநகராட்சிதான் ஏற்று நடத்த வேண்டுமென்று துறை முடிவு செய்ததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. அல்லது அதை விரைவில் எடுத்து நடத்த அரசு பரிசிலனையில் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாநகராட்சியே எடுத்துச் செய்ய வேண்டுமென்று தற்போது ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சங்கனூர் பள்ளத்தில் பயங்கரமான அளவுக்குத் தண்ணீர் வந்து பெரிய நாசக்கேடு உருவாகி, ஏற்கனவே ஒரு பாலம் கட்ட முயற்சித்த பொழுது, அந்தப் பாலத்துக்குக் கூட ஆபத்து ஏற்பட்டது. ஆகவே, பாலங்கள் கட்டப்படுவதற்காகப் பாதுகாப்பு வேண்டுமென்ற அடிப்படையில், அந்தப் பள்ளத்தினுடைய கரைகளைப் பலமான அளவுக்குக் கட்டுவதற்கு ஏற்பாடும் அதோடு சேர்த்து செய்யப்படுமா? அதற்கு ஏதாவது திட்டங்கள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கரைகளைப் பலப்படுத்துகிற திட்டமும் உள்ளது. அதையும் நிறைவேற்றுவோம்.

1-4-1974-க்கு முன் ஓய்வு பெற்ற ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கான ஓய்வூதியம்.

*வினா எண் 193—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்து 1-4-1974-க்கு முன். ஓய்வு பெற்ற பணியாளர்கள் சங்கத்திடமிருந்து ஓய்வு ஊதியம் அளிக்கக்கோரி, கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம் தற்போது உள்ள விதிகளின்படி அவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க இயலாது. எனினும் ஒரு குறிப்பிட்ட ஓய்வூதியம் Adhoc Pension அளிப்பது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற நிலையிலே ஓய்வூதியம் அளிக்கப்படாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த விகிதாச்சார அடிப்படையில் வருகின்றவர்கள், தற்போது குறைந்த எண்ணிக்கை உடையவர்களாக இருப்பதால், அவர்களின் வயது வரம்பைக் கருத்தில் கொண்டும், அவர்களின் முதுமை நிலைமையைக் கருத்தில் கொண்டும், தற்கால நிலைமையை அனுசரித்தும் அவர்களுக்கு தற்காலப் பென்ஷன் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.